# கல்வி உளவளத்துணையும் அதன் பிரயோக ரீதியான பிரச்சினைகளும்

**கே கனேசராஜா**

*கலை கலாசார பீடம், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகம்*
*drkanesraj@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

உளவியல் என்பது இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என்ற இரண்டுக்கும் பொதுவான ஒரு துறையாகக் காணப்படுகிறது. இத்தகைய உளவியலானது மனிதனது உடல், உள நடத்தைகளைப்பற்றி ஆராய்கின்ற ஓர் அறிவியல் துறையாகும். இவ் உளவியலை பொது உளவியல், பிரயோக உளவியல் என்ற இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். பிரயோக உளவியல் வகைகளில் முக்கியமான ஒரு துறையாக கல்வி உளவளத்துணை காணப்படுகிறது. கல்வி உளவளத்துணை சேவை பாடசாலையின் ஒரு முக்கிய அம்சமாக அமைய வேண்டும் என்பதை இன்றைய கல்வியலாளர்கள் உணர்ந்துள்ளனர். மனிதன் தனது வாழ்நாளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றான். அவை எமது வாழ்க்கையின் சாதாரண நிகழ்வாகும். அதிகமான சந்தர்ப்பங்களில் அவை பிரச்சினைக்குரியனவாக மாறிவிடும். அவ்வாறான சவால்கள் நிறைந்த சந்தர்ப்பங்களில் சரியாக வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு சக்தியையும், தைரியத்தையும் வழங்குவதன் ஊடாக தனி நபரை திருப்தி செய்யும் ஓர் முறையாக உளவியல் உளவளத்துணை (Psychological Counselling) காணப்படுகிறது. கல்வி கற்றலின் போதும், வெவ்வேறு வயது மாணவர்களுக்கு கற்பித்தலின் போதும் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் சிக்கல்களையும் அணுகுவதற்கு உதவுகின்ற ஒரு முறையே கல்வி உளவளத்துணை (Educational Counselling) ஆகும். அதாவது இது முன்பள்ளி உளவளத்துணை, ஆரம்பக்கல்வி உளவளத்துணை, இரண்டாம் நிலைக்கல்வி உளவளத்துணை, மூன்றாம் நிலைக்கல்வி உளவளத்துணை எனவும் வகைப்படுத்தப்படுகிறது. இவ் ஆய்வானது கல்வி உளவளத்துணையை பிரயோகிப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றி பேசுவதாக உள்ளது. இவ் ஆய்வின் முறையியலாக விபரிப்பு முறை, ஒப்பீட்டு முறை, பகுப்பாய்வு முறை, விமர்சன முறை போன்றவையும் காணப்படுகிறன. மேலும் இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாக அமைந்ததோடு பண்பு ரீதியான ஆய்வாக உள்ளது. இவ் ஆய்வானது சமூகத்தில் கல்வி உளவளத்துணை அவசியமானது என்பதை வெளிக்கொண்டுவர முற்படுகிறது.

**திறவுச் சொற்கள் :** உளவியல், கல்வி உளவளத்துணை, கற்றல், கற்பித்தல்



ISBN 978-955-627-120-1

## 1. ஆய்வு அறிமுகம்

எமது வாழ்க்கையின் அதிகமான சந்தர்ப்பங்களில் சில நிகழ்வுகள் பிரச்சினைக்குரியதாக மாறிவிடும். அவ்வாறான பிரச்சினைகள் நிறைந்த சந்தர்ப்பங்களில் அப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்பதற்கு சக்தியையும், தைரியத்தையும் வழங்குவதன் ஊடாக தனி நபரை திருப்தி செய்யும் ஓர் முறையாக உளவியல் உளவளத்துணை (Psychological counselling) காணப்படுகின்றது. கற்பித்தலின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளையும், சிக்கல்களையும் அணுகுவதற்கு உதவுகின்ற ஒரு முறையே கல்வி உளவளத்துணை (Educational Counselling)) ஆகும். இவ் உளவளத்துணைச் சேவையானது பல வகைப்படும். முன்பள்ளி உளவளத்துணை, ஆரம்பக்கல்வி உளவளத்துணை, இரண்டாம் நிலைக்கல்வி உளவளத்துணை, மூன்றாம் நிலைக்கல்வி உளவளத்துணை என வகைப்படுத்தப்படுகிறது. இவ் ஆய்வானது கல்வி உளவளத்துணையை பிரயோகிப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றி பேசுவதாக உள்ளது.

## 2. ஆய்வின் நோக்கங்கள்.

பிரதான நோக்கம்,

- கல்வி உளவளத்துணையின் மூலம் விசேட கல்வித்தேவைகள் உள்ள, கற்றல் குறைபாடுடையோர். மீத்திறனுடையோர், ஆக்கத்திறனுடையோர் ஆகியோரை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கற்றல் முறைகளைக் கையாளுதல்.

துணை நோக்கங்கள்,

- மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை தொடர்ந்து நெறிப்படுத்தல்.
- தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல்.

## 3. ஆய்வுப்பிரச்சினை

கல்வி நிறுவனங்களில் கல்வி உளவளத் துணையைப் நடைமுறைப்படுத்தவதில் பல சிக்கல்கள் காணப்படுகிறன.

## 4. ஆய்வுக்கருதுகோள்

வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு சக்தியையும், தைரியத்தையும் வழங்குவதன் ஊடாக தனி நபரை திருப்தி செய்யும் ஓர் முறையாக கல்வி உளவளத்துணை உள்ளது.

ISBN 978-955-627-120-1

## 5. ஆய்வு முறையியலும் தரவு சேகரித்தலும்

இவ் ஆய்வானது ஒரு பண்பு ரீதியான ஆய்வாக காணப்படுவதோடு இதற்காக விபரிப்பு முறை, ஒப்பீட்டு முறை, விளக்கமுறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு இவ் ஆய்வுக்கான தரவு சேகரிப்பு முறையாக இரண்டாம் நிலைத்தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், கனிணித்தகவல்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

## 6. கலந்துரையாடல்

### (அ) உளவளத்துணை

உளவியலானது மிகப் பரந்துபட்ட துறையாகும். பல்வேறுபட்ட உளவியலாளர்கள் விஞ்ஞானம் சார்ந்த முறையில் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களினையும் கோட்பாடுகளையும் உளவியல் தொடர்பாக முன்வைத்துள்ளனர். இவ் உளவியலில் முக்கியமான ஒரு பிரிவாக கல்வி உளவியல் காணப்படுகிறது. கற்றல் பிரச்சினைகள் தொடர்பான கோட்பாடுகள் அதேபோல் குழந்தைகளின் கற்றல் தொடர்பான நடைமுறைக் கோட்பாடுகள், ஏன் கற்கின்றனர், ஏன் மறக்கின்றனர், ஏன் கற்பதை நிறுத்திக் கொள்ளுகிறார்கள் போன்ற பல பிரச்சினைகள் தொடர்பாக இத் துறை ஆய்வு செய்கின்றது. கல்வி பற்றி ரூசோ கூறும் போது ''கல்வி மூலம் ஒரு மனிதனை நல்ல மனிதப் பண்புடையவராகவும் நற்குடிமகனாகவும் ஆக்கி, அவனைப் போன்றவர்கள் மூலமாக நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்'' என்றார்.

உளவளத்துணை என்பது ஒரு மனிதன் தனது சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுகின்ற போது அவன் எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ பல்வேறான பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், இடையூறுகளுக்கும் உள்ளாகின்றான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலவற்றில் தன்னம்பிக்கையோடு முகங்கொடுக்கின்றான். சிலவற்றில் அவற்றை தீர்க்க முடியாமல் பல்வேறான நெருக்கீடுகளுக்கும், மனத்தாக்கங்களுக்கும் உட்பட்டு தமது வாழ்க்கையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் அவதிப்படுகின்றான். இவ்வாறாக அவன் பிரச்சினைகளுக்கு உட்படும் போது அவனது உணர்ச்சிகள் மேலோங்குவதோடு அவனது அறிவுசார் நடவடிக்கைகளும் ஒடுக்கப்படுகின்றன. எனவேதான் உளவளத்துணை செயற்பாடானது அவனது அறிவை தட்டியெழுப்புகின்ற நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. (பெரேரா.ஆர்.எல் 2007) இவ்வாறான உளவளத்துணை செயற்பாட்டின் போது மனிதன் தன்னை நேர்மனப்பான்மையோடு நோக்கவும், தன் பிரச்சினையை தெளிவாக உணரவும், தனது பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கும், வாழ்வை சந்தோசமாக எதிர் கொள்வதற்கும் தேவையான சக்தியினையும், திறமையினையும் தன்னுள் வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது (பெரேரா.ஆர்.எல் 2007).



ISBN 978-955-627-120-1

உளவளத்துணையானது ஆற்றுப்படுத்தல், வழிகாட்டலும் ஆலோசனையும், சீர்மியம், மனவழி மருத்துவம் போன்ற சொற்பதங்களைக் கொண்டுள்ளது. இது விஞ்ஞானத்திலிருந்து தோன்றிய கலையாகக் கொள்ளப்படுகின்றது. பொதுவாக உளவளத்துணை என்பதை உள்ளத்தை வளப்படுத்துவதற்கு துணை புரியும் கலையாகவும் கொள்ளலாம். அதாவது பிரச்சினைக்குட்பட்ட ஒருவருக்கு அவரிடமே மறைந்திருக்கும் வளமான திறன்கள், பலம் ஆகியவற்றை வெளிக்கொணருவதன் மூலம் அவருக்கு அந்தப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கும் ஒரு பொறிமுறையாக அடையாளம் காணலாம். (ரிட்லி ஜயசிங்க)

உளவளத்துணை பற்றி பல்வேறு அறிஞர்களும் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். இந்தவகையில் உளவளத்துணை என்றால். பிரச்சினையோடு வருபவரை ஏற்று மதித்து அவருக்கு ஆதரவு வழங்கி தம்மைத் தாமே உணரவைத்து நம்பிக்கையூட்டி பிரச்சனைகளை எதிர்கொண்டு வாழ ஒருவரை ஆயத்தப்படுத்தலாகும். இது ஒருவர் தனது உளவளத்துணை முழுமையாக விருத்தி செய்கின்ற பயணத்தில் தான் எதிர்கொள்ளும் தடைகளை வெற்றிகொள்ள அவருக்கு வழங்கும் ஒரு தொடர் செயற்பாட்டு உதவியாகும். இது பற்றி சிந்தனையாளர்கள் பல கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

1. எனியோன்ஸ் என்பவர், உளவளத்துணை என்பது சக்தியைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

2. போர்டின் என்பவர், உளவளத்துணை என்பது உளவளத்துணையாளர் ஒருவருடன் கலந்துரையாடுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பயன்படுத்தப்படும் நுட்பமாகும்.

3. கார்ல் ரோஜர்ஸ் என்பவர், உளவளத்துணை என்பது ஒருவருக்கு அவரைப்பற்றிய தெளிவை ஏற்படுத்தி அதற்கமைய அவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக் கொள்வதற்கு வழங்கப்படும் உதவியாகும்.

4. ஆன் ஜோன்ஸ் என்பவர், உளவளத்துணை என்பது வாழ்க்கையில் எதிர்நோக்கும் ஒவ்வொரு அனுபவங்களையும் வெற்றிகரமாக எதிர் கொள்ளக்கூடிய ஆற்றலை ஒருவரிடத்தில் விருத்தி செய்ய உதவி வழங்கும் செயன்முறையாகும்.

5. அமெரிக்க உளநலச்சங்கம் உளவளத்துணை என்பதை. ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர் சந்திக்கின்ற தடைகளை வெற்றி கொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு தொடர் செயற்பாட்டு உதவியேயாகும். (அஸ்ஹர்.எம்.எப்.எம், 2010).

6. அல்போன்ஸ் என்பவர், பிரச்சினையோடு வருபவரை ஏற்று மதித்து கசப்பான அனுபவங்களை முழுமையாகப்பகிர உதவி, அவரது உணர்வுகளுக்குள் புகுந்து, அவரது ஏக்கங்களையும், தேவைகளையும், ஆசைகளையும் அறிந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அறியச்செய்து, அவரே அப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தான்



ISBN 978-955-627-120-1

எடுத்த தீர்மானத்தை செயற்படுத்துவதில் வெற்றி பெறுகின்றாரா? ஏன்று துணைவரோடு இணைந்து சோதித்து பிறரோடு நல்லுறவுகளைக் கட்டியெழுப்பி அவரது ஆற்றல்களை உணர்ந்து முழுமை வாழ்வு வாழச் செய்யும் கலையே உளவளத்துணையாகும். (அஸ்ஹர்.எம்.எப்.எம், 2010) என்கிறார். ஏன உளவளத்துணை குறித்து பலவாறாகப் பேசியுள்ளனர்.

**(ஆ) கல்வி உளவளத்துணை**

நாம் ஒவ்வொருவரும் வாழ்நாளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கிறோம். அவை வாழ்க்கையின் சாதாரண நிகழ்வுகளாகும். சில வேளைகளில் அவை பிரச்சினைக்குரியதாக மாறிவிடும். அவ்வாறான சவால்கள் நிறைந்த சந்தர்ப்பங்களில் வெற்றிகரமான வாழ்க்கைக்கு முகங்கொடுப்பதற்கு சக்தியையும் தைரியத்தையும் வழங்குவதனூடாக தனிநபரை விருத்தி செய்யும் அறிவியல் ரீதியான முறைகளைக்கொண்ட உளவளத்துணை முக்கிய இடம் வகிக்கின்றது. கல்வி உளவளத்துணையானது உளவளத்துணையில் முக்கியமான ஒரு பகுதியாகும். இது கற்றல், கற்பித்தல் நடவடிக்கையின்போது ஏற்படுகின்ற சிக்கல்களுக்கு உளவியல் ரீதியாக பொருத்தமான தீர்வுகளைத் தேடுவதோடு அவற்றைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதை இதன் சேவையாகக் கொள்கிறது. இச்சேவையினை உளவளத்துணையாளர், அதிபர், ஆசிரியர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள், பெற்றோர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே சிறப்பாகச் செய்யற்படுத்த முடியும்.

கல்வி உளவளத்துணையை நான்கு முக்கிய பிரிவுகளாக பிரித்து நோக்கலாம்.

1. முன்பள்ளி உளவளத்துணை
2. ஆரம்பக்கல்வி உளவளத்துணை
3. இரண்டாம் நிலைக்கல்வி உளவளத்துணை
4. மூன்றாம் நிலைக்கல்வி உளவளத்துணை

முதலில் உள்ள மூன்றும் பாடசாலை உளவளத்துணைச்சேவையாக உள்ளது. இவ் உளவளத்துணையின் நோக்கங்களின் அடிப்படையில் ஆறு துறைகளாக வகுக்கலாம். அதாவது கல்விசார் ஆற்றுப்படுத்தல், தனியாள்சார் ஆற்றுப்படுத்தல், தொழில்சார் ஆற்றுப்படுத்தல், உடல்நலம்சார் ஆற்றுப்படுத்தல், சமூகம்சார் ஆற்றுப்படுத்தல், பாடப்புறச் செயல்சார் ஆற்றுப்படுத்தல் என நோக்கலாம். இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் முக்கியமானவையாகும்.



ISBN 978-955-627-120-1

**முன்பள்ளி உளவளத்துணை**

முன்பள்ளி உளவளத்துணை எனும்போது 3 – 6 வயதுடையவர்கள் அடங்குவர். இவர்கள் சுயாதீனமாக தீர்மானங்கள் எடுக்கும் ஆற்றலும், தாமாக ஆற்றுப்படுத்தலைப்பெறும் ஆற்றலும் கொண்டிருப்பதில்லை. தமது உளத்தேவைகள் எவை என இனங்கண்டு, அவற்றை பூர்த்தி செய்யும் வல்லமையற்றவர்களாகவும், வீட்டிலும் பாடசாலையிலும் பெரியவர்களுக்கு கட்டுப்பட்டு வாழும் தன்மையுடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு உடலியல் தேவைகள், உளவியல் தேவைகள், அறிகை விருத்தித் தேவைகள் என்பன அவசியமாகவுள்ளன. இத்தகைய வயதுடையவர்களுக்கு அவர்களின் முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர் தொடர்பை மையமாகக்கொண்ட உளவளத்துணைச்சேவையே அவசியமாகக் கருதப்படுகிறது.

**ஆரம்பக்கல்வி உளவளத்துணை**

முதலாம் வகுப்பு தொடக்கம் - ஐந்தாம் வகுப்பு வரையான காலப்பகுதியை ஆரம்பக்கல்வியாக கணிப்பிட முடியும். இப்பருவத்திலுள்ள பிள்ளைகள் அபாயகரமான செயல்களில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன. அதேநேரம் வளர்ச்சிக்குறைபாடுடைய பிள்ளைகளையும் இந்த வயதில் அவதானிக்க முடியும். அத்தோடு பிள்ளைகளில் பல பலவீனங்களை அடையாளப்படுத்தவும் முடியும். அவர்களினது குறைபாடுகளை இனங்கண்டு தனியாள் உளவளத்துணை, குழு உளவளத்துணை என்பனவற்றை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதாகும்.

**இரண்டாம்நிலைக்கல்வி**

இப்போதுள்ள பாடசாலை அமைப்பில் 6ஆம் வகுப்பு தொடக்கம் 13ஆம் வகுப்புகள் வரையான மாணவர்களை இரண்டாம்நிலைக்கல்வி எனலாம். இப்பருவமானது கட்டிளமைப்பருவத்தின் ஆரம்பப் பருவமாகும். இது வாழ்க்கையின் எழுச்சி மிக்க ஒரு காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் மனவெழுச்சி, உணர்வு, சிந்தனை, நடத்தைகளில் பல மாற்றங்கள் என்பன ஏற்படும். இதனை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். இக்காலப்பகுதியில் மாணவர்கள் தனது இலக்கை அடைய முயற்சிப்பர். முடியாவிட்டால் விரக்திநிலைக்கு தள்ளப்படுவர். இதனால் இப்பருவ மாணவர்களுக்கு உளவளத்துணை அவசியமானதாகும்.

**மூன்றாம் நிலைக்கல்வி**

பாடசாலையை விட்டு வெளியேறியவர்கள் தங்களது தொழில்நிலைகளை விருத்தி செய்து கொள்வதற்காக தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக்கழகம், தொழில்பயிற்சி நிலையம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் உளவளத்துணையே மூன்றாம்


ISBN 978-955-627-120-1

நிலைக்கல்வி உளவளத்துணை எனப்படும். இத்தகைய நிறுவனங்களில் கற்கும் மாணவ மாணவிகளுக்கு பல பண்புகளையும், பல பிரச்சினைகளையும் கொண்டுள்ளார்கள். இதனால் முறையான உளவளத்துணைச்சேவை அவசியமாகவுள்ளது.

இவர்களின் பண்புகளாக: உள நெருக்கடிகளும், முரண்பாடுகளும் நிறைந்த பருவம். முதியோரின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரமடைய எத்தனித்தல், இருந்தும் முதியோரின் உதவியை நாடி நிற்றல், பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருடன், முரண்பாடுகளும், எதிர்ப்பும் கொண்டவர்களாக காணப்படல், முதியோரின் கணிப்பை விட தமது சகபாடிகளின் கணிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தல், ஆசிரியர்கள், பெற்றோர்களின் தொடர்புகளில் மனமுறிவு ஏற்படுதல். அதேபோல் இவர்களின் பிரச்சினைகளாக: எப் பாடத்தைத் தெரிவு செய்தல், எத்துறையைத் தெரிவுசெய்தல், எதிர்கால தொழில் வாழ்கையை எப்படி தீர்மானித்தல், பாலியல் சார்பான பிரச்சினைகள், புகைத்தல், மதுபானம், போதைப்பொருள் தொடர்பான சூழல்கள், உடல் எடை அதிகரித்தல் தொடர்பான சிக்கல்கள், உளச்சோர்வு, தற்கொலை எண்ணம், போர் சூழலால் ஏற்படும் உளப் பிரச்சினைகள், அரசியற், குழுக்கள், இயக்கங்கள் சார்பான நெருக்கடிகள், பெற்றோர் - பிள்ளைகள் முரண்பாடுகள், ஆசிரியர் - மாணவர் முரண்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**(இ) கல்வி ஆற்றுப்படுத்தல் சேவையின் முக்கியத்துவம்**

ஆற்றுப்படுத்தல் தொடர்ச்சியாக நடைபெறும் ஒரு நீண்டகால செயற்பாடாகும். ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளின் மூலம் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, அத்துறையில் தகைமையும், பயிற்சியும் பெற்றவர்கள் மாத்திரம் ஈடுபடுதல் அவசியமாகும். அத்துடன் அவர்கள் பொருத்தமான ஆளுமைப் பண்புகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு அதீத பயம், நெருக்கீடு, பதகளிப்பு சார் பிரச்சினைகள் ஏற்படாமல் வருமுன் காத்தல், பிரச்சினைகள் ஏற்பட்டு விட்டால் தீர்வு காணல், தீர்வு கண்டதும் அப்பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாமல் தொடர்ந்து கண்காணித்தல் முக்கியமானவையாகும்.

ஆற்றுப்படுத்தல், நம்பகரமான தரவுகளின் அடிப்படையில் அமைவதுடன், சகல தரவுகளும் பொருத்தமான, நம்பகரமான கருவிகளின் துணையுடன் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தம்மைப் பற்றிய விரும்பத்தகாத செய்திகளை வெளிப்படுத்த தயக்கமும் கூச்சமும் காட்டுவர். எனவே அவர்களுடன் தொடர்புடையவர்களான பெற்றோர், பாதுகாவலர், சகபாடிகள், உறவினர்கள் ஆகியோரிடம் பெரும்பாலான தரவுகளை பெற்றுக் கொள்ள வேண்டும். தரவுகள் சேகரிக்கும் கருவிகள், ஆற்றுப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் நுட்பங்கள் என்பன சந்தர்ப்பத்திற்கும் தனியாளிற்கும் பொருந்தக்கூடிய வகையில் நெகிழ்ச்சியானதாக



ISBN 978-955-627-120-1

அமைதல் வேண்டும். இத்தகைய நுட்பங்களை தெரிவு செய்வதற்கு ஆற்றுப்படுத்துணருக்கு பூரண சுதந்திரம் உண்டு.

மேற்கூறிய அடிப்படையில் கல்வி உளவளத்துணை பயன்பட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்தும் போதும் பல சிக்கல்கள் காணப்படுவதை என்னால் அவதானிக்க முடிந்துள்ளது.

**(ஈ) முடிவுரையும் விதந்துரைகளும்**

கல்வி உளவளத்துணையானது பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து காணப்பட்டாலும் இச்சேவையினை சரியாக மேற்கொள்வதில் பல தடைகள் உள்ளதை அவதானிக்கலாம். அதாவது ஆளணியினர் சார்ந்த பிரச்சினைகள், கட்டிட வசதிக் குறைவு, தளபாடங்கள், உபகரணங்கள் குறைவாக இருத்தல், உள மருத்துவரது சேவையினை பெறுவதில் சிரமம், தொடர்பாடல் வசதிகள் குறைவாக இருத்தல் போன்றவற்றினால் கல்வி உளவளத்துணையினை மேற்கொள்வதில் பல தடைகள் காணப்படுகின்றன. இவ்வாய்வு முன்வைக்கும் விதந்துரைகளாக, பாடசாலைகளில் போதுமான உளவளத்துணையாளர்களை நியமித்தல். பாட விதானங்களில் மாற்றத்தைக் கொண்டுவருதல், மாணவர்களை ஏனைய துறைகளில் ஈடுபட வைத்தல் அதன் மூலம் மாணவர்களின் மன அழுத்தத்தையும் , அதீத பயத்தையும் குறைத்தல், நெருக்கீட்டைக் குறைத்தல். உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தல், உளவளத்துணைக்கென பிரத்தியேக இடத்தை ஒதுக்குதல், குறித்த பாடசாலைப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலை மருத்துவ உளவளத்துணையாளர்களோடு தொடர்புகளைப் பேணுதல் போன்றவற்றை முன்வைக்கலாம்.

## *REFERENCES*

அந்தோணி . தா. ஜான், (1997), *ஆற்றுப்படுத்தலின் வகைகள்*,நாடார் வெளியீடு,இந்தியா, ப.2.

அஸ்ஹர்,எம்.எப்.எம்., (2010), *உளவளத்துணை ஓர் அறிமுகம்,* ஏ.ஜே. அச்சகம், தெஹிவளை,பக்.55- 57

சந்தானம. எஸ், (2005), கல்வியில் மனவியல், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை,பக் -142 - 157

சபா.ஜெயராசா, (2008), *சீர்மிய உளவியல்*, சேமமடு பதிப்பகம், கொழும்பு, ப.21

சிவதாஸ்.சா (2005), *நலமுடன்*, நிகரி வெளியீட்டு நிறுவனம், பக். 65 – 66



ISBN 978-955-627-120-1

தயா தியாகராஜா,(1998) உறவும் துணையும், கீதாஞ்சலி பப்ளிகேஷன், இலங்கை, ப.8

தயா சோமசுந்தரம், சிவயோகன்.சா , (2004) தமிழ் சமுதாயத்தில் உளநலம், சாந்திகம், யாழ்ப்பாணம். இரண்டாம் பதிப்பு,. பக் . 160 – 164

விமலா கிருஷ்ணபிள்ளை,(2003) வழிகாட்டலும் ஆலோசனையும், கே.எல்.யூ. கிராபிக்ஸ், ராஜகிரிய- கொழும்பு, இரண்டாம் பதிப்பு, பக் - 216 - 218

நௌபர். யூ. எல். எம். (மொ.பெ,ஆ.இ), *உளவியல் சார் உளவளத்துணை அணுகுமுறை*, நிறுவன வெளியீடு, இலங்கை. ப. 15

Corey, Gerald, (2000), *Theories & Practice of Counseling & Psychology, p.8*

Patterson, L.E., (2001), The Counselling process, wad swath press, India. p..3

ISBN 978-955-627-120-1